# SUBBALAKSHMI LAKSHMIPATHI COLLEGE OF SCIENCE
## TVR Nagar, Aruppukottai Road, Madurai – 625 022
## LETTER OF UNDERTAKING
உறுதிமொழிக் கடிதம்
## GENERAL RULES (Applicable to All Students)
பொது விதிமுறைகள் (அனைத்து மாணவ/மாணவிகளுக்கும் பொருந்தும்)

1. Every student is expected to attend the classes regularly. Attendance will be taken every period. Absence without leave or without prior permission for one hour will be treated as absence for the respective session. ஒவ்வொரு மாணவ/மாணவியும் வகுப்பிற்குத் தவறாமல் வர வேண்டும். ஒவ்வொரு மணி நேரத்திற்கும் வருகைப்பதிவு எடுக்கப்படும். முன்னறிவிப்பு இல்லாமல் ஒரு மணி நேரத்திற்கு மேல் மாணவ/மாணவி வகுப்பிற்கு வராமல் இருந்தால் அது விடுப்பாகக் கருதப்படும்.

2. No Student shall take part in any party/communal/religious or any public movement which the college authorities think as undesirable for students. நிர்வாகத்தினரால் விரும்பத்தகாத அரசியல்/சமுதாய/மதம் சார்ந்த மற்றும் பொது நிகழ்வுகளில் எந்தவொரு மாணவ/மாணவியும் பங்கு பெறக்கூடாது.

3. As per the "The Tamil Nadu Anti-Ragging Act 1977", Ragging is a criminal offence and is strictly prohibited. Besides taking severe disciplinary and legal action against the offenders, they will be summarily expelled from the college. தமிழ்நாடு கேலிவதை தடுப்புச்சட்டம்1977ன் கீழ் கேலிவதை குற்றம் என்பதால் அது தடை செய்யப்பட்டுள்ளது. இத்தவறை செய்யும் மாணவ/மாணவிகள் மேல் கடுமையான ஒழுங்கு மற்றும் சட்ட ரீதியான நடவடிக்கை எடுப்பதுடன் குறிப்பிட்ட மாணவர்கள் கல்லூரியிலிருந்து நீக்கப்படுவார்கள்.

4. No Student will be permitted to attend the college riding two wheelers on any day. வேலை நாட்களிலோ, தேர்வு நாட்களிலோ, விடுமுறை நாட்களிலோ இருசக்கர வாகனங்களில் மாணவ/மாணவி கல்லூரி வருவதற்கு அனுமதியில்லை.

5. All dayscholars in and around Madurai should only use the College bus for attending the college. மதுரை மற்றும் அதை சுற்றியுள்ள பகுதியிலிருந்து நாள்தோறும் வீட்டிலிருந்து வரும் மாணவர்கள் அனைவரும் கல்லூரிப் பேருந்தை மட்டுமே பயன்படுத்த வேண்டும்.

6. Every student should possess an identity card issued by the college which should be worn by the student inside the college premises. It should be produced whenever asked for, especially when dealing with the office, library and the Canteen. கல்லூரி வளாகத்திற்குள் ஒவ்வொரு மாணவ/மாணவியும் கல்லூரியின் அடையாள அட்டையை அணிந்திருக்க வேண்டும். கல்லூரி அலுவலகம், நூலகம், கேண்டின் ஆகியவற்றை கையாளும் போது எந்த நேரத்திலும் அடையாள அட்டை காண்பிக்கப்பட வேண்டும்.

7. Students should wear the Uniform on all working days. Students must be properly groomed (clean shaven, neat hair cut, trimmed nails, polished shoes, pressed uniform with ID card). மாணவ / மாணவிகள் அனைத்து வேலை நாட்களிலும் சீருடை அணிந்திருக்க வேண்டும். மாணவர்கள் சுத்தமான முகச்சவரம், நேர்த்தியான முடிவெட்டு செய்திருக்க வேண்டும். நகம்வெட்டுதல், பளபளப்பான ஷு, சீரான சீருடை மற்றும் ஐடி கார்டு அணிந்து நேர்த்தியாக வர வேண்டும்.

| | |
|---|---|
| Signature of the Parent / Guardian<br>பெற்றோர்/காப்பாளர் கையொப்பம் | Signature of the Student<br>மாணவர் கையொப்பம் |

8. Boys wearing Stud, Bracelet, Chain and boys colouring their hair will not be allowed to enter the College. தோடு, கைவளையம், சங்கிலி அணிபவர்கள் மற்றும் தலைமுடிக்கு வண்ணம் பூசிக்கொண்டு வரும் மாணவர்கள் கல்லூரி வளாகத்திற்குள் அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

9. Bus commuters must wear their bus ID card and produce it at the time of boarding the bus and whenever required by the authorized person. கல்லூரிப் பேருந்தில் வருகின்ற மாணவர்கள் பேருந்து அடையாள அட்டையைப் பயணிக்கும் போதும் மற்றும் பேருந்தில் ஏறும் பொழுதும் அணிந்திருக்க வேண்டும். அங்கீகரிக்கப்பட்ட நபர் தேவைப்படும்போது சரிபார்ப்பர்.

10. Bus commuters must board in and board off the bus ONLY at their respective stops mentioned in their bus ID card. பேருந்தில் பயணிக்கும் மாணவ/மாணவிகள் பேருந்து அடையாள அட்டையில் குறிப்பிட்டுள்ள பேருந்து நிறுத்தத்தில் மட்டுமே ஏறவோ,இறங்கவோ வேண்டும்.

11. Students should not bring Mobile Phones to the College. எந்தவொரு மாணவ/மாணவியரும் கண்டிப்பாக அலைபேசியை கல்லூரிக்கு கொண்டு வரக் கூடாது.

12. Students should not use any kind of alcohol, drugs & cigarette inside or outside the College campus. எந்தவொரு மாணவரும் எவ்வகையான போதை மற்றும் புகையிலை சம்பந்தப்பட்ட பொருட்களையும் கல்லூரி வளாகத்திலேயோ, வெளியிலேயோ பயன்படுத்தக்கூடாது.

13. Students should not attempt to copy or do any kind of Malpractice in Class Test, Internal Test & Semester Examination. மாணவ/மாணவியர்கள் வகுப்புத் தேர்வு, உள்மதிப்பீட்டு தேர்வு மற்றும் பருவத்தேர்வுகளில் எவ்வகையான முறையற்ற செயல்களிலும் ஈடுபடக்கூடாது

14. Change of program, will not be permitted after admission. எந்தப் பாடப்பிரிவிற்கும் மாற்றம் செய்து கொள்வதற்கு அனுமதி கிடையாது

15. The college will not allow the readmission of students who have discontinued the course for any reason, including non-payment of fees, or who have been terminated from the college for any reasons, such as ragging, drug abuse, or gross violations of college rules. கல்லூரி கட்டணம் செலுத்த முடியாமல் படிப்பை இடைநிறுத்தம் செய்த மாணவர்கள் மற்றும் ராகிங், போதைப்பொருள் பயன்பாடு, கல்லூரி விதிகளை கடுமையாக மீறுதல் போன்ற எந்தவொரு காரணத்திற்காகவும் கல்லூரியிலிருந்து நீக்கப்பட்ட மாணவர்களை மீண்டும் கல்லூரி அனுமதிக்காது.

16. Fee once paid to the college will not be refunded under any circumstance. கல்லூரியில் செலுத்தப்பட்ட கட்டணம் எந்தவொரு சூம்நிலையிலும் திரும்ப அளிக்கப்படமாட்டாது

17. In case, any student leaves the institution at any time during the academic year he/she should pay the fee for that academic year in full. ஒரு வேளை மாணவ/மாணவி கல்லூரியை விட்டு விலகினால் அவன் /அவள் குறிப்பிட்ட கல்வியாண்டின் முழுஆண்டு கட்டணத்தையும் செலுத்தியிருக்க வேண்டும்.

18. Girls should plait their hair while coming to the college. Girls should avoid using lipsticks. மாணவியர்கள் கல்லூரிக்கு வரும் சமயத்தில் நேர்த்தியாக சடை பின்னலிட்டு வரவேண்டும். மேலும் மாணவிகள் உதட்டுச்சாயம் பூசி கொண்டு கல்லூரிக்கு வரக்கூடாது.

____________________________ ____________________

Signature of the Parent / Guardian
பெற்றோர்/காப்பாளர் கையொப்பம்

Signature of the Student
மாணவர் கையொப்பம

# HOSTEL RULES (Applicable only for Hostellers)

விடுதி விதிமுறைகள் (விடுதி மாணவ/மாணவிகளுக்கு மட்டும் உரியது)

1. Hostel students can leave the hostel only during I and III Saturdays and Sundays and declared holidays. விடுதி மாணவ/மாணவிகள் முதலாம் மற்றும் மூன்றாம் சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் மற்றும் அறிவிக்கப்பட்ட விடுமுறை நாட்களில் மட்டுமே வீட்டிற்குச் செல்ல வேண்டும்.

2. Outing during evening time from 06.00 p.m. to 07.00 p.m. is permitted for Boys only on Tuesday & Thursday only on written request. செவ்வாய் மற்றும் வியாழன் அன்று மட்டுமே மாணவன் மாலை 6.00 முதல் 7.00 வரை வெளியே சென்று வர அனுமதி வழங்கப்படும். இதற்கான அனுமதியை மாணவன் தனித்தனியாக எழுதி அனுமதி பெற வேண்டும்.

3. Only 3 times in a semester a student can leave the hostel, other than I and III Saturday & Sunday and Declared holidays as per Academic Calendar, on Emergency Leave Form. முதலாம் மற்றும் மூன்றாம் சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமை தவிர கல்வியாண்டு நாட்குறிப்பின் விடுமுறை நாட்கள் தவிர ஒரு பருவத்திற்கு மூன்று முறை மட்டுமே ஒரு மாணவ/மாணவி வீட்டிற்குச் செல்ல விண்ணப்பிக்க முடியும்

4. Whenever a Student returns to the hostel a boy must come before 07.00 p.m. and a girl must come before 06.00 p.m. on all evening times or before 7.30 a.m. during day time with duly filled in the leave slip. விடுதிக்கு, மாணவர் மாலை 7.00 மணிக்கு முன்பும் மாணவி மாலை 6.00 மணிக்கு முன்பும் வர வேண்டும். அல்லது காலை 7.30 மணிக்கு முன்பு விடுதி விடுப்புக் கடிதத்துடன் வர வேண்டும்.

5. Extension of leave MUST be informed well in advance to the Principal and Deputy Warden, by the Parent concerned. விடுப்பினை நீட்டிக்கும் தருணத்தில் பெற்றோர்கள் முன் கூட்டியே முதல்வர் மற்றும் துணை விடுதிக்காப்பாளருக்குத் தெரிவிக்க வேண்டும்.

6. Leave forms must be produced before 24 Hours at Principal’s Desk after getting the signature from HOD and Assistant Warden. விடுப்ப விண்ணப்பத்தை துறைத்தலைவர் மற்றும் துணை விடுதிக்காப்பாளரிடமிருந்து கையொப்பம் பெற்று 24 மணி நேரத்திற்கு முன்னர் முதல்வர் மேஜையில் சமர்ப்பிக்க வேண்டும்.‘

7. Students while coming to the Mess, they should not bring cell phones and boy Students should not come with Half-Pant. மாணவ/மாணவிகள் உணவு விடுதிக்கு வரும் பொழுது கைப்பேசியை கொண்டு வரக்கூடாது. மற்றும் மாணவர்கள் அரைக்கால் சட்டை போட்டு உணவு விடுதிக்கு வரக்கூடாது.

8. **Once a boy/girl has been admitted in the hostel, he/she has to stay in the hostel during the entire period (ug for 3 years and pg for 2 years).** ஒரு மாணவனோ/மாணவியோ விடுதியில் சேர்க்கப்பட்ட பின் தன் படிப்பு அதாவது (UG மூன்று வருடம், PG இரண்டு வருடம்) முடியும் வரை விடுதியில் தங்கியிருக்க வேண்டும்.

9. **In case of any withdrawal from the hostel on any account the student has to pay the hostel fee for the entire course (for ug 3 years and pg 2 years) and can vacate the hostel.** விடுதியிலிருந்து இடைப்பட்ட காலத்தில் விலகினால் தன் படிப்பு காலம் (UG மூன்று வருடம், PG இரண்டு வருடம்) விடுதிக்கான முழுக் கட்டணத்தை செலுத்திய பிறகு தான் விடுதியை விட்டு நீங்க முடியும்.

I ________________________________ have read through the rules and I shall abide by them without fail.

நான்________________________________கொடுக்கப்பட்டுள்ள விதிமுறைகளை வாசித்தேன். அவற்றை கண்டிப்பாக கடைப்பிடிப்பேன் என்று உறுதியளிக்கிறேன்.

| | |
|---|---|
| ____________________________ | ____________________ |
| Signature of the Parent / Guardian<br>பெற்றோர்/காப்பாளர் கையொப்பம் | Signature of the Student<br>மாணவர் கையொப்பம் |
| Head of the Department<br>துறைத் தலைவர் | Principal<br>முதல்வர் |

Place : ________________

Date : ___ / ____ / ______